**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 1011/2025

Prosecution PW 5

Deposition of Witness for Defence

Court

Name : நாகராஜன்

Father's Name : கணேசன்

Village :

Taluk :

District :

Age :

Calling :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 05.03.2026.

**1ம் எதிரி நீதிமன்ற காவலிலிருந்து ஆஜர்படுத்தப்பட்டார். 2ம் எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

1. நான் கரூர் நகர காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 04.08.2025ம் தேதி கரூர் நகர சிறப்பு உதவி ஆய்வாளர் பாலசுப்பிரமணியம் அவர்கள் நிலைய பொறுப்பு அலுவலிலிருந்து கரூர் அன்பழகன் மகன் நவீன் குமார் என்பவர் கொடுத்த புகார் மனுவிற்கு

30.07.2025ம் தேதி மனு ரசீது எண்.1173/25 பதிவு செய்து விசாரணைக்கு பின் கரூர் நகர காவல் நிலைய கு.எண்.634/25, ச.பி. 303(2) பிஎன்எஸ்ன்படி வழக்கு பதிவு செய்து எனது புலன் விசாரணைக்கு வைத்தார். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் அன்றை தினமே விசாணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் பரணி கிருஷ்ணன், கோபி கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் 17.00 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2. பின்னர், அன்றைய தினமே பிரித்திவிராஜ் மற்றும் நவீன் குமார் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 07.08.2025ம் தேதி கரூர் நகர காவல் ஆய்வாளர் மாரிமுத்து அவர்கள் கரூர் லைட்ஹவுஸ் கார்னர் அருகில் வாகன சோதனையில் இருந்தபோது, முத்து கருப்பையா (எ) விக்கி போலிசாரை பார்த்து தப்பிக்க நினைத்தவரை பிடித்து விசாரித்தபோது, அவர் தானும், குருதேவா என்பவரும் சேர்ந்து கரூர் அண்ணா நகர், 1வது கிராஸ் அருகில் பவஸ்ரீ பில்டிங் பார்க்கிங்கில் இருந்த TN 28 BY 7606 என்ற ராயல் என்பீல்டு வாகனத்தை எடுத்து சென்றதாகவும், தற்போது காமராஜ் மார்க்கெட் ஒயின்ஷாப் அருகே எதிரி குருதேவா இருப்பதாக கூறியதன் அடிப்படையில் அங்கு சென்று பார்க்கையில் ஒயின்ஷாப் அருகிலிருந்த பிஎஸ்என்எல் அலுவலகம் அருகில் இருசக்கர வாகனம் இருந்ததை காவல் ஆய்வாளர் மாரிமுத்து அவர்கள் கண்ணுற்ற சாட்சிகளான தயாநிதி மற்றும் சிவபிரகாஷ் முன்னிலையில் கைப்பற்றி நிலையம் கொண்டு வந்தார்.

3. மேற்குறிப்பிட்ட முத்து கருப்பையா கரூர் நகர காவல்நிலைய கு.எண்.642/25, ச.பி.303(2) பிஎன்எஸ் வழக்கில் கைது செய்யப்பட்டவரை கரூர் நகர காவல்நிலைய கு.எண்.634/25, ச.பி.303(2) பிஎன்எஸ் நான் விசாரித்து மேற்குறிப்பிட்ட வாகனத்தை கைப்பற்றுதல் மகசரில் உதவி ஆய்வாளர்

மாரிமுத்து முன்னிலையில் கைப்பற்றினேன். **படிவம் 91 அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** காவல் அடைப்பு அறிக்கை தயார் செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். மேலும், தலைமறைவாக இருந்த குருதேவா என்பவரை தேடி வந்த நிலையில் அவர் ஈரோடு வடக்கு காவல் நிலைய கு.எண்.328/25, ச.பி. 303(2) பிஎன்எஸ் குற்றத்தின்படி கைது செய்யப்பட்டு ஈரோடு மாவட்ட சிறையில் இருந்தவரை 24.09.2025 அன்று சம்பரதாய கைது செய்தும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த பாலசுப்பிரமணியம் அவர்களை விசாரித்தும், சம்பவம் உண்மையென தெரிய வரவே எதிரி குருதேவா மற்றும் எதிரி முத்து கருப்பையா ஆகியோர்களை 24.09.2025 ம் தேதி குற்றப் பத்திரிகை தாக்கல் செய்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

**குறுக்கு விசாரணை ( எதிரி தரப்பில்)**

வாகனம் தொலைந்ததாக சொல்லப்படும் தேதி 15.07.2025 மற்றும் 16.07.2025 என்றால் சரிதான். காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்ததாக சொல்லப்படும் தேதி 04.08.2025 என்றால் சரியல்ல, 30.07.2025 ம் தேதி தகவல் கிடைக்கப் பெற்று மனு ரசீது எண்.1173/25 கொடுக்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கையில் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த தேதியாக 04.08.2025 என்று உள்ளது என்றால் சரிதான். அதற்கு முதல் தகவல் அறிக்கையில் காலம் 8 ல் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. வண்டி தொலைந்ததாக சொல்லப்படும் தேதிக்கும் புகார் கொடுக்கப்பட்ட தேதிக்கும் 20 நாட்கள் காலதாமதம் உள்ளது என்றால் சரியல்ல, 15 நாட்கள் ஆகும். புகார் கொடுக்க ஏற்பட்ட காலதாமதத்திற்கு எந்த ஒரு விளக்கமும் புகார்தாரர் கொடுத்த புகாரிலோ, குற்ற இறுதி அறிக்கையிலோ கொடுக்கவில்லை என்றால் சரிதான். வண்டி தொலைந்துபோனதாக சொல்லப்படும் இடமானது வீட்டின் கேட்டிற்கு உள்புறம் என்றால் சரிதான். வீட்டின் கேட்டை உடைத்த பிறகுதான் அங்கு சென்று வாகனத்தை எடுக்க முடியும் என்றால் சரியல்ல.

2. வீட்டின் முன்புறம் உள்ள கேட் பகுதி பூட்டியவாறு இல்லாத நிலையில் இருந்ததால் எதிரிகள் வாகனத்தை எடுத்துள்ளனர். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளையோ, சம்பவ வீட்டின் சிசிடிவி கேமரா பதிவுகளையோ நான் சாட்சியாக எடுத்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். திருட்டுபோன வீட்டில் சிசிடிவி கேமரா உள்ளதா என்று எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. சிசிடிவி கேமரா பதிவுகளை பார்த்திருந்தால் யார் வாகனத்தை திருடினார்கள் என்பது பற்றி தெரிந்திருக்கும் என்றாலும், அவ்வாறு பார்க்காததால்தான் தவறுதலாக எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. 07.08.2025ம் தேதியன்று லைட்ஹவுஸ் கார்னரில் போலிசார் வாகன தணிக்கை செய்ததில் எந்தெந்த காவலர்கள் ஈடுபட்டனர் என்பது பற்றி குறிப்பிட்டு குற்ற இறுதி அறிக்கையில் கூறவில்லை என்றால் சரிதான். வாகன தணிக்கையில் ஈடுபட்ட காவலர்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படவில்லை என்றால் சரிதான். 07.08.2025 அன்று வாகன தணிக்கையே நடைபெறவில்லை என்றாலும், அதனால்தான் அங்கிருந்ததாக சொல்லப்படும் காவலர்கள் யாரையும் விசாரணை செய்து இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றாலும் சரியல்ல.

3. எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டதா அல்லது கையால் எழுதப்பட்டுள்ளதா என்றால் சம்பவ இடத்திற்கு மடிக்கணினி எடுத்து செல்லப்பட்டு ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டது. மாதிரி வரைபடத்தில் உள்ள வீட்டின் உரிமையாளரை விசாரித்து இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் எதிரியை கைது செய்யும்போது அந்த இடத்தில் இருந்த நபர்களா அல்லது வரவழைக்கப்பட்ட சாட்சிகளா என்றால் எதிரியை கைது செய்தபோது, அந்த இடத்தில் இருந்த பொது நபர்கள் யாரும் சாட்சியாக வராததால் வரவழைக்கப்பட்ட சாட்சிகள் மூலம் ஒப்புதல் வாக்குமூலம்

வாங்கப்பட்டது. வரவழைக்கப்பட்ட சாட்சிகளும் புகார்தாரரும் நண்பர்கள் என்றால் சரியல்ல. பிஎஸ்என்எல் அலுவலகம் முன்பாக சிசிடிவி கேமரா உள்ளது என்றால் நான் பார்க்கவில்லை. லைட் ஹவுஸ்கார்னரில் சிசிடிவி கேமரா உள்ளது என்றால் சரிதான். எதிரியாக கருதப்படும் நபர்களிடமிருந்து எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றால் சரியல்ல. எதிரியாக கருதப்படும் நபர்களிடமிருந்து எந்த ஒரு வாகனமும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புகார்தாரர் சமுதாயத்தில் செல்வாக்கு மிகுந்த நபர் என்பதால் அவர் கொடுத்த காலதாமதமான புகாரை பெற்று அவர் கொடுத்த அழுத்தத்தினால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து வழக்கில் சம்மந்தமில்லாத இரண்டு நபர்களை கைது செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரியாக கருதப்படும் நபர்களுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./–எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**